**நானாவித வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டம் (பிரான்ஸ் அரசாங்க நிதியின் கீழ் 46 பாலங்களின் புனர்நிர்மாணப் பொதி) 2013**

---

நானாவித வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் (பிரான்ஸ் அரசாங்க நிதியின் கீழ் 46 பாலங்களின் புனர்நிர்மாணப் பொதி) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது பிரான்ஸ் அரசாங்கத்தின் சார்பில் பிரான்ஸின் நற்றிஸ்க் வங்கிக்கும் இலங்கையின் முன்னாள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் தற்போதைய கப்பற்துறை அமைச்சும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு போன்றன நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையில் 46 உருக்கு பாலங்களை வழங்கி நிர்மாணிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் யூரோ 45.80 மில்லியனிற்கு சமமான ரூபா 7,564 மில்லியனானதுடன் அதில் யூரோ 22.05 மில்லியனிற்கு சமமான ரூபா 3,642 மில்லியன் பிரான்ஸ்சின் நற்றிஸ்க் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 யூலை 19 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2015 யூலை அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்குவதும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்**

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியிணர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய

தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவீனங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 1,263,379,106 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினத்தின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது ஏற்பட்ட செலவினம் |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினம் | 19,177,746 |
| செயற்திட்ட முகாமைத்தவ செலவினம் | 15,238,054 |
| நிர்மாணக் கிரயம் | 1,228,963,306 |
| | 1,263,379,106 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 187,300,000 தொகையான பங்களிப்பு செயற்திட்டத்தின் நிதிகள் மாற்றங்கள் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 180,800,000 ஆன நேரொத்த தொகையுடன் உடன்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிப் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி**,** செயற்திட்டத்தின் நிதியளிப்பு மற்றும் முதலாவது மீளாய்வாண்டு காலப்பகுதிகாகன நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடன் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகைகள் | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | யூரோ மில்லியின் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியின் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியின் | ரூபா மில்லியன் |
| வெளிநாட்டு உதவி | 22.05 | 3,642 | 3.00 | 514 | 3.00 | 514 |
| இலங்கை அரசாங்கம் | 23.75 | 3,922 | 1.13 | 187 | 1.13 | 187 |
| மொத்தம் | 45.80 | 7,564 | 4.13 | 701 | 4.13 | 701* |

*	ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டியவை உள்ளடக்கப்பட்டிராமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையுடன் இத்தொகை உடன்பட்டிருக்கவில்லை.

**6.2 பௌதீக செயலாற்றல்**

--------------------------------

செயற்திட்டமானது யூரோ 22.03 மில்லியன் கிரயத்தில் பாலங்களின் கூறுகளை வழங்குவதற்கு வெளிநாட்டுக் கம்பனி ஒன்றுடன் 2012 திசெம்பர் 12 இல் ஒப்பந்தமென்று கைசாத்திட்டிருந்தது. அவற்றில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் 17 ஆம் உட்பிரிவின் பிரகாரம், சகல பயன்பாட்டு உபகரணங்களுடன் சேர்த்து பாலக் கூறுகள் 730 நாட்களிற்கு இடையில் வழங்கப்பட்டிருக்க வேண்டியதுடன் வேலைப் பட்டியலின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது 25 பாலங்களின் கூறுகள் வழங்கப்பட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 பாலங்களின் கூறுகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம், 15 பொறியியலாளர்கள் செயற்திட்டத்தால் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய பயிற்சி வசதிகள் 2014 நவம்பர் 30 வரையும் அவர்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**6.3 ஒப்பந்த நிர்வாகம்**

----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது ரூபா 59.74 மில்லியன் கிரயத்தில் ஹன்வெல – பூகொட வீதியில் 11/2 ஆம் இலக்க பாலத்தின் நிர்மாணத்திற்காக ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்ததுடன் அவற்றின் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 66 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையான வீச்சில் மூல அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட வேலைகள் ஐந்து சந்தர்ப்பங்களில் அதிகரித்திருந்ததன் விளைவால் வேலைகளின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 2,887,600 ஆல் அதிகரித்திருந்தது.

(ii) கிடைக்கப்பெற்ற பதிவேடுகளின் பிரகாரம், பாலத்தின் நிர்மாண வேலைகள் 2014 மார்ச் 10 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அஸ்பற் இடல், பள்ளங்களை நிரப்பல், விளிம்பு அகலமாக்கல் மற்றும் புற் தரையிடல் போன்ற நிர்மாண வேலைகள் ரூபா 24,190,088 கிரயத்தில் 2014 யூலை 10 வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், வேலைகள் பூர்த்தியாக்கல் திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் விலை வேறுபாட்டால் ரூபா 765,254 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) கணக்காய்வாளரால் செய்யப்பட்ட கள வருகைகளின்படி, பாலத்திற்கு அருகிலுள்ள வீதி மேற்பரப்பில் ஏறத்தாழ 3 மீற்றர்கள் நீளமான வெடிப்புக்கள், பாலத்தின் மேற்பரப்பில் மற்றும் நடைபாதையில் 5 சதுர அடி மீற்றரை விட பெருமளவு பொத்தல்கள் புனரமைப்பு வேலைகளில் பல குறைபாடுகள் வெளிப்பட்டது.

(ஆ) தவலம- நெலுவ பட்டுவன்கல வீதியின் 9/5 ஆம் இலக்க பாலத்தின் நிர்மாண ஒப்பந்தம் ரூபா 86,743,250 ஆன விலையில் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

(i) ஒப்பந்தகாரர்கள் அளவீட்டுப் பாதுப்பை உறுதிப்படுத்துவதற்கு ரூபா 1,080,0000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கையெழுத்துப் பலகை, வழியடைப்பு நடாக்கள், வாகனநெரிசல் கட்டுப்படுத்தல் அலகு போன்ற பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதற்கும் வேலைத்தளத்திற்கு பாதுகாப்பு உடைகள், சப்பாத்துக்கள், தலைக்கவசங்கள் போன்ற வாழ்க்கைப் பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதற்கும் ஒப்பந்தகாரரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 11 மாத காலத்திற்காக ஒப்பந்தகாரரின் பொறியியலாளர்களிற்காக தனியான அலுவலகத்தை பேணுவதற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 880,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரரால் அவ்வாறு அலுவலகம் எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், 11 மாத காலத்திற்காக முழு நேர அடிப்படையில் ஒரு எழுதுனர் மற்றும் இரண்டு காவலாளிகளை ஈடுபடுத்துவதற்கு ஒப்பந்தகாரருக்கு ரூபா 1,080,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது அவ்வாறு உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு வேலைக்கமர்த்தப்பட்டிருக்கவில்லை.

(iii) வேலைகள் தொடங்கியதில் அடைந்த 56 நாட்கள் தாமதத்தை ஈடுசெய்வதற்கு திருத்தப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டங்கள் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹட்டன் - நுவரெலியா வீதியின் 48/2 ஆம் இலக்க பாலத்தின் நிர்மாண ஒப்பந்தம் மீளாய்வாண்டின் போது ரூபா 65,234,576 கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் சாத்தியவளக் கற்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நிர்மாண வேலைகளிற்காக செயற்திட்டத்தால் ரூபா 7,603,239 தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்காக சுற்றாடல் அதிகாரசபை அல்லது தேசிய கட்டிட ஆராய்ச்சி தாபனம் என்பவற்றின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. புனரமைப்பு வேலைகள் மண்சரிவுக்கான சாத்தியத்தில் தேசிய கட்டிட ஆராய்ச்சி தாபனம் எச்சரிக்கை செய்தமையால் பின்னர் கைவிடப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் கைவிடப்பட்ட வேலைகள் மீதான இழப்பீடாக ரூபா 2,018,418 தொகை கோரிக்கையொன்றைச் செயதிருந்தார். மேலும், முன்னரே ஒப்பந்த நடவடிக்கைகள் இடைநிறுத்தியமையால் ரூபா 8,415,142 தொகையான தொழில் ஆரம்பிப்பு முற்பண மீதி நிலுவையாக இருந்தது.

**6.4. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு அவர்களுடைய பாதுகாப்பில் இருந்த சொத்துக்களை பெறுவதற்கும் பதிவேடுகளில் சொத்துக்களின் பெறுமதி மற்றும் ஏனைய விபரங்களைப் பதிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் கடன் பெறுகைகளில் மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரரால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த வாகனங்கள், உபகரணங்கள், தளபாடங்கள் போன்ற சொத்துக்கள் வேறு நிர்மாண நடவடிக்கைகளிற்காக ஒப்பந்தகாரர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

(ஆ) செயற்திட்டமானது 07 ஆசன இயலளவுடன் 2000 சீசீ பயணிகள் வான் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு குறிப்புரைகளின் உட்பிரிவு இல. 7 இல் குறிப்பிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது 05 ஆசன இயலளவுடன் 1300 சீசீ மோட்டார்கார்

ஒன்றைக் கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், குறிப்புரை மாற்றங்களிற்காக முறையான காரணங்கள் இல்லாமல் வழங்குநருக்கு ரூபா 1,187,500 ஆன உடன்பட்ட விலை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மேலும், செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,100,200 தொகையான ஒதுக்கீட்டின் கீழ் ஒப்பந்தகாரரால் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் ஒப்பந்தகாரரின் பொறியியலாளரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மேற்பார்வை நோக்கங்களிற்காக பயன்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டவை செயற்திட்டத்தின் பிரதிப் பணிப்பாளரால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட செயற்திட்டத்தின் ஆளணியில் நிதி முகாமையாளர் பதவி உள்ளடக்கப்பட்டிருக்காத போதிலும் அமுலாக்கல் முகவராண்மையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 357,500 தொகையான உரிய பதவிக்கான பதில் கடமைப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், உத்தியோகத்தரின் வருகைக்கான பதிவேட்டுச் சான்றுகள் கணக்காய்விற்காக பெறப்பட்டிருக்கவில்லை.